வி. கார்ஷின்

தவளையின் பயணம்

குழந்தைகளுக்கான ருஷ்ய, சோவியத் அமர இலக்கிய நூல்கள்

வி. கார்ஷின்

தவளையின் பயணம்

மொழிபெயர்ப்பாளர்: பூ. சோமசுந்தரம்

ஓவியர்: நி. சரூஷின்

ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

முன் ஒரு காலத்தில் ஒரு தவளை இருந்தது. அது சேற்றுக் குட்டையில் உட்கார்ந்து சிறு பூச்சிகளைப் பிடித்து விழுங்கும். இளவேனில் காலத்தில் மற்றத் தவளைகளோடு சேர்ந்து உரக்கக் கத்தும். கொக்கினிடம் அகப்படாமல் மட்டும் தப்பினால் இந்த மாதிரியே அது

ஆயுள் முழுவதும் நிம்மதியாக வாழ்ந்திருக்கும். ஆனால் ஒரு நிகழ்ச்சி குறுக்கிட்டது.

நீரிலிருந்து துருத்திக் கொண்டிருந்த பட்ட மரத்தின் ஒரு கொம்பில் தவளை ஒரு நாள் உட்கார்ந்திருந்தது. சிறு தவளைக்கு அது இன்பமாய் இருந்தது.

''ஆகா, இன்றைக்குத்தான் பருவநிலை எவ்வளவு இதமும் ஈரமுமாக இருக்கிறது! இந்த உலகத்திலே உயிர் வாழ்வது எவ்வளவு இன்பமானது!'' என்று நினைத்துக் கொண்டது.

மழைத் துளிகள் தவளையின் மழமழப்பான முதுகில் பட்டு வயிற்றுக்கு அடியே வழிந்து கால்களை நனைத்துக் கொண்டு ஓடின. தவளைக்கு இது பேரானந்தமாக

இருந்தது. ஆனந்த மிகுதியால் அது கத்தக்கூட வாய் எடுத்தது. நல்ல வேளையாக, அப்போது இலையுதிர் காலம் என்பதும், தவளைகள் இலையுதிர் காலத்தில் கத்துவதில்லை, இளவேனிற் காலத்தில்தான் கத்தும் என்பதும் அதற்கு நினைவு வந்து விட்டது. ஆகையால் அது பேசாமல் சாரலின் சுகத்தை அனுபவிப்பதில் ஈடு பட்டது.

திடீரென்று மெல்லிய சீழ்க்கை ஒலி காற்றில் விட்டு விட்டு ஒலித்தது. ஒரு வகை வாத்துக்கள் உண்டு. அவை பறக்கும் போது அவற்றின் இறக்கை கள் காற்றை வெட்டியவாறு பாட்டு ஒலி எழுப்பும். அல்லது, இன்னும் சரியாகச் சொன்னால் சீழ்க்கை அடிக்கும். இந்த மாதிரி வாத்துக்கள் நம் தலைக்கு மேலே உயரத்தில் பறக்கும்போது ஸ்ஸ்ஸ-ஸ்ஸ்ஸ-ஸ்ஸ்ஸ என்ற சீழ்க்கை ஒலி காற்றில் பரவும். ஆனால் வாத்துக்கள் கண்ணுக்குத் தெரிய மாட்டா: அவை அவ்வளவு உயரத்தில் பறக்கும். இந்தத் தடவை வாத்துக் கள் வானில் ஒரு வட்டம் இட்டு இறங்கி, தவளை இருந்த சேற்றுக் குட்டையில் உட்கார்ந்தன.

''குவா, குவா! நாம் இன்னும் வெகு தூரம் பறக்க வேண்டும். இரை எடுப்போம்'' என்றது ஒரு வாத்து.

தவளை அக்கணமே ஒளிந்து கொண்டது. தன்னைப் போன்று பருத்துக்

கொழுத்த தவளையை வாத்துக்கள் தின்ன மாட்டா என்பது அதற்குத தெரிந்துதான் இருந்தது. ஆனாலும், எச்சரிக்கையாய் இருப்பது மேல் என்று நினைத்து, பட்ட மரத்துக்கு அடியில் நீரில் ஆழ்ந்தது.

நீருக்குள் அதற்கு இருப்புக் கொள்ளவில்லை. வாத்துக்கள் எங்கே பறந்து போகின்றன என்று தெரிந்து கொள்ள அதற்கு ஆவலாய் இருந்தது. ஆகவே, கொஞ்சம் சிந்தனை செய்தபின், அது தன் உருண்டை விழித் தலையை நீருக்கு மேலே நீட்டியது.

''குவா, குவா! இதோ குளிர் வந்து விடும்! சீக்கிரம் தெற்கே போவோம்! சீக்கிரம் தெற்கே போவோம்!'' என்றது இரண்டாவது வாத்து.

எல்லா வாத்துக்களும் குவாக் குவா என்று கத்தி அதன் பேச்சை ஆதரித்தன.

தவளை தயக்கத்தை விட்டு விட்டுப் பேசத் தொடங்கிற்று:

''வாத்து அக்காள்மாரே, நான் தொந்தரவு கொடுப்பதற்கு மன்னிக்க வேண்டும். நீங்கள் போவதாகப் பேசிக் கொண்டீர்களே, தெற்கு, அது என்ன?''

வாத்துக்கள் தவளையைச் சூழ்ந்து கொண்டன. அதைக் கொத்தித்தின்ன அவற்றுக்கு முதலில் ஆசை உண்டாயிற்று. ஆனால் அது நிரம்பப் பெரியது, தொண்டையில் மாட்டிக் கொள்ளும் என்று நினைத்து அந்த எண்ணத்தைக் கைவிட்டன. பிறகு எல்லாம் சிறகுகளை அடித்துக் கொண்டு கத்தத் தொடங்கின:

''தெற்கு அருமையான இடம்! இப்போது அங்கே வெதுவெதுப்பாய் இருக்கும்! அங்கே அற்புதமான, இன்பமான சேற்றுக் குட்டைகள் உண்டு! அங்கேதான் எப்பேர்ப்பட்ட கிருமிகள்! தெற்கு அருமையான இடம்!'' அவை போட்ட கூச்சலில் தவளைக்குக் காது செவிடு ஆகிவிடும் போல் இருந்தது. வெகு சிரமப்பட்டு மன்றாடி, அவற்

றை அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டது. பின்பு, உள்ளவற்றில் எல்லாம் பருத்ததும் அறிவு உள்ளதுமாகத் தனக்குத் தோன்றிய ஒரு வாத்தினிடம் தெற்கு என்றால் என்ன என்று விளக்கும் படி வேண்டிற்று. வாத்து தெற்கின் அருமை பெருமைகளை எடுத்துச் சொன்னதும் தவளைக்கு மகிழ்ச்சி பொங்கியது. ஆனாலும் அது எச்சரிக்கை உள்ளது ஆகையால், ''தெற்கே சிறு பூச்சிகள் நிறைய உண்டோ?'' என்று கேட்டது.
றை அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டது. பின்பு, உள்ளவற்றில்

''ஓ, படலம் படலமாகப் பறக்கும்!'' என்றது வாத்து.

''பலே!'' என்று அடக்க முடியாமல் கத்தி விட்டது தவளை. வேறு தவளைகள் இருக்கின்றனவா என்று உடனே திரும்பிப் பார்த்தது— தான் கத்தியதைக் கேட்டு இலையுதிர் காலத்தில் கத்தியதற்காகத் தன்னை அவை கடிந்து கொள்ளுமே என்பதால். ஒரு தடவையாவது கத்தாமல் இருக்க அதனால் முடியவில்லை. ''என்னையும் உங்களோடு அழைத்துப் போங்கள்!'' என்றது.

''நீ சொல்லுவது எனக்கு வேடிக்கையாய் இருக்கிறது! நாங்கள் உன்னை எப்படி அழைத்துப் போவதாம்? உனக்குத்தான் இறக்கைகள் இல்லையே'' என்று கூறிற்று வாத்து.

''நீங்கள் எப்போது புறப்படுவீர்கள்?'' என்று கேட்டது தவளை.

''சீக்கிரம், சீக்கிரம்!'' என்று எல்லா வாத்துக்களும் ஆரவாரித்தன. ''குவா, குவா, குவா! இங்கே குளிர்கிறது! தெற்கே போவோம்! தெற்கே!''

''எனக்கு யோசனை செய்ய ஐந்து நிமிடங்கள் மட்டும் கொடுங்கள். இதோ வந்து விடுகிறேன். ஏதாவது நல்ல வழி எனக்குத் தோன்றலாம்'' என்றது தவளை.

தான் மறுபடி தொற்றிக் கொண்டிருந்த கொம்பிலிருந்து நீரில் சளப்பென்று குதித்துப் பாசியில் மூழ்கியது அது. வெளிச் சந்தடிகள் எண்ணம் இடுவதற்கு இடைஞ்சலாய் இருக்கக் கூடாது என்பதற்காகப் பாசியில்

ஒரேயடியாகப் புதைந்து கொண்டது. ஐந்து நிமிடங்கள் கழிந்தன. வாத்துக் கள் பறக்கத் தயாராகி விட்டன. அதற்குள் கொம்பின் பக்கத்தில் தவளையின் தலை நீருக்கு மேல் திடீரென்று துருத்தியது. அதன் முகத்தில் மகிழ்ச்சி ஒளி வீசிற்று. அந்த மாதிரி ஒளி தவளையின் முகத்தில் தான் வீச முடியும்.

''யோசனை செய்து விட்டேன்! கண்டுபிடித்து விட்டேன்!'' என்று ஆர்ப்பரித்தது தவளை. ''உங்களில் இருவர் ஒரு குச்சியை அலகுகளால் பிடித்துக் கொள்ளுங்கள். நான் குச்சியின் நடுப் பாகத்தைக் கவ்விக் கொள்ளுகிறேன். நீங்கள் பறக்கும் போது நானும் கூட வருவேன். நீங் களும் நானும் கத்த வாய் திறக்கக் கூடாது, அவ்வளவு தான். எல்லாம் அருமையாய் இருக்கும்'' என்றது.

லேசான தவளையைக் கூடச் சுமந்து கொண்டு அவ்வளவு நீண்ட தூரம் வாய் திறவாமல் பறப்பது சள்ளைபிடித்த வேலைதான். ஆனால் தவளையின் புத்திக்

கூர்மை வாத்துக்களைப் பரவசப்படுத்தியது. ஆகை யால் அவை அதைத் தூக்கிக் கொண்டு போக ஒரு மனதாக இசைந்தன. இரண்டு மணிக்கு ஒரு தரம் முறை மாற்றிக்கொள்வது என்று தீர்மானித் தன. வாத்துக்கள் கணக்கிட முடியாதபடி நிறைய இருந்தன.

தவளையோ, ஒன்றுதான். ஆகவே ஒவ்வொரு வாத்தின் முறையும் எப்போ தாவதுதான் வரும். நல்ல உறுதியான குச்சியைத் தேடி எடுத்தன. இரண்டு வாத்துக்கள் அதன் இரு முனைகளையும் அலகுகளால் பற்றிக் கொண்டன. தவளை நடுப் பகுதியைக் கவ்விக் கொண்டது. வாத்துக் கூட்டம் காற்றில் பறந்தது. வாத்துக்கள் வெகு உயரே பறந்ததால் தவளைக்கு அச்சத்தால் குலை பதறிற்று. தவிரவும் வாத்துக்கள் ஒரு சீராகப் பறக்காமல் குச்சியை இழுத்தன. பாவம், தவளை காகிதக் கோமாளி பொம்மை போலக் காற்றில் ஊசலாடிற்று. நழுவித் தரையில் விழாமல் இருப்பதற்காக அது முழு வலிமையுடனும் தாடைகளை இறுக்கிக் கொண் டது. விரைவில் அது தன் புதிய நிலைமைக்குப் பழகி விட்டது. சுற்று முற்றும் பார்வை செலுத்தக் கூடத் தொடங்கிற்று. வயல்களும் புல் வெளிகளும் ஆறுகளும் மலைகளும் கீழே விரைந்து ஓடின. ஆனால் அவற்றை நன்றாகப் பார்க்கத் தவளைக்கு முடியவில்லை. ஏனென்றால் குச்சியில் தொங்கியபடி அது பின்னேயும் ஓரளவு உயரேயும்தான் பார்க்க முடிந் தது. என்றாலும் ஒரு சில காட்சிகள் அதன் பார்வையில் பட்டன. அதற்கு மகிழ்ச்சியும் பெருமையும் பொங்கின.

''ஆகா, எவ்வளவு அருமையான வழி கண்டுபிடித்தேன்'' என்று எண்ணிக் கொண்டது.



அதைச் சுமந்து சென்ற இரண்டு வாத்துக் களின் பின்னே பறந்தன மற்ற வாத்துக்கள். அவை உரக்கக் கத்தித் தவளையைப் புகழ்ந்தன.

''நம் தவளைத் தங்கச்சிக்கு அபார மூளை. வாத்துக் களில்கூட இவ்வளவு புத்திசாலியைப் பார்ப்பது அருமைதான்'' என்றன.

அவற்றுக்கு நன்றி கூறத் தவளைக்கு ஆசை உண்டாயிற்று. வெகு சிரமப்பட்டு அந்த ஆசையை அடக்கிக் கொண்டது. வாயைத் திறந் தால் அவ்வளவு உயரத்திலிருந்து விழ நேரிடும் என்பது நினைவுக்கு வரவே வாயை இன்னும் இறுக மூடிக் கொண்டது. இப்படி ஊசலாடிய வாறு ஒரு பகல் முழுவதும் பயணம் செய்தது தவளை. அதைத் தூக்கிச் சென்ற வாத்துக்கள் பறந்தபடியே முறை மாற்றிக் கொண்டன, குச்சியின் முனைகளைச் சாமர்த்தியமாக அலகுகளால் மாறி மாறிப் பற்றிக் கொண்டன. அப்போது

தவளைக்குக் குலை நடுங்கிற்று. எத்தனையோ தரம் அது திகிலால் வாய்விட்டுக் கத்தத் தெரிந்தது. ஆனால் மனம் தளரக் கூடாது என்பதனால் அது நெஞ்சைத் திடப்படுத்திக் கொண்டது. மாலையில் வாத்துக் கூட்டம் ஒரு சேற்றுக் குட்டையில் தங்கிற்று. பொழுது புலர்ந்ததும் வாத்துக்களும் தவளையும் பயணத்தைத் தொடர்ந்தன. இந்தத் தடவை தவளை வழியில் நடப்பவற்றை நன்றாகப் பார்ப்பதற்காக, வயிறு பின்னேயும் தலையும் முதுகும் முன்னேயும் இருக்கும் படி குச்சியைக் கவ்விக் கொண்டது. வாத்துக்கள் அறுவடையான வயல்களுக்கும் மஞ்சல் பாரித்த காடுகளுக்கும் தானிய அம்பாரங்கள் குவித்த கிராமங்களுக்கும் மேலாகப் பறந்தன. மனிதர்களின் பேச்சுக் குரல்களும் தானியக் கதிரடிக்கும் கூட்டுக் கோல் களின் ஓசையும் கிராமங்களிலிருந்து வந்தன. ஆட்கள் வாத்துக் கூட்டத் தையும் அதில் ஏதோ விந்தையான பொருளையும் கண்டு கைகளால் சுட்டிக் காட்டினார்கள். தரைக்கு அருகாகப் பறக்கவும் தன்னைக் காட்டிக் கொள் ளவும் மனிதர்கள் தன்னைப் பற்றி என்ன பேசுகிறார்கள் என்று கேட்கவும் தவளைக்கு மிகுந்த விருப்பம் உண்டாயிற்று. அடுத்த இளைப்பாறும் இடம் வந்ததும் அது சொல்லிற்று:

''கொஞ்சம் தாழ்வாகப் பறக்க முடியாதா? அவ்வளவு உயரத்தில் பறக்கும் போது எனக்குத் தலை சுற்றுகிறது. திடீரென்று எனக்கு சுகக் கேடு வந்துவிட்டால் விழுந்து விடுவேனோ என்று பயமாய் இருக்கிறது.''

பரிவுள்ள வாத்துக்கள் தாழ்வாய்ப் பறப்பதாக அதற்கு வாக்களித்தன. மறு நாள் அவை தாழ்வாகப் பறந்ததால் ஆட்களின் குரல்கள் நன்றாகக் கேட்டன.

''பாருங்கள், பாருங்கள், வாத்துக்கள் தவளையைக் கொண்டு போகின் றன!'' என்று ஒரு கிராமத்தில் சிறுவர்கள் கத்தினார்கள்.

இது தவளையின் காதில் பட்டது. அதன் உள்ளம் களி துள்ளியது. ''பாருங்கள்! பாருங்கள் இந்த அதிசயத்தை!'' என்று அடுத்த கிராமத்தில் பெரியவர்கள் கத்தினார்கள்.

''இந்த யோசனை தோன்றியது எனக்குத்தான், வாத்துக்களுக்கு அல்ல என்பது இவர்களுக்குத் தெரியுமா?'' என்று எண்ணம் இட்டது தவளை.

''பாருங்கள், பாருங்கள்! என்ன அற்புதம்! இந்த சாமர்த்தியமான வழியைக் கண்டுபிடித்தவர் யாரோ தெரியவில்லையே!'' என்று வியந்தார் கள் இன்னொரு கிராமத்து மக்கள்.

இதற்குப் பிறகும் தவளையால் சும்மா இருக்க முடியவில்லை. எச்சரிக் கையை அது அடியோடு மறந்துவிட்டது.

''இதைக் கண்டுபிடித்தது நான்தான்! நான் தான்!'' என்று முடிந்த வரையில் உரக்கக் கத்திற்று.

அவ்வளவுதான், தலை குப்புற விழுந்தது. வாத்துக்கள் கலவரத்துடன் கத்தின. ஒரு வாத்து அப்பாவித் தவளையை வழியில் ஆதரவாகப் பிடிக்க முயன்றது,

ஆனல் அதன் இலக்கு பிசகிவிட்டது. தவளை நான்கு கால்களையும் வெட்டி வெட்டி உதைத்தவாறு விரைவாகத் திரையில் விழுந்தது. ஆனல் வாத்துக்கள் மிக வேகமாகப் பறந்ததால் தவளைகத்தத் தொடங்கிய இடத்துக்கு நேராக, கடினமான பாதையில் விழாமல், வெகு தூரம்தள்ளி விழுந்தது. இது அதன் நல்ல காலம்தான். ஏனென்றல் அது கிராமத்தின் ஓரத்தில் இருந்த கலங்கல் குளத்தில் சளப்பென்று விழுந்து மூழ்கியது.

விரைவில் அது நீருக்கு வெளியே வந்து, ''இதைக் கண்டுபிடித்தது நான்தான், நான்தான்'' என்று கத்திற்று.

ஆனல் அக்கம் பக்கத்தில் ஒருவரும் இல்லை. திடீரென்று ஏற்பட்ட சளப்பு ஓசையால் திகில் அடைந்த குளத்துத் தவளைகள் எல்லாம் நீரில் ஒளிந்து கொண்டன. கொஞ்ச நேரத்தில் அவை நீருக்கு வெளியே தலைகாட்டிய போதுபுதிய தவளையைக் கண்டு ஆச்சரியம் அடைந்தன.

புதிய தவளை தன் விந்தைக் கதையை அவற்றுக்கு விவரமாகச் சொல்லிற்று. ''நீண்ட தூரம் பயணம் செய்ய எனக்குக் குழந்தைப்பருவம் முதலே ஆசை. ஓயாமல் யோசனை செய்தேன். முடிவில், வாத்துக்கள் மேல் சவாரி செய்வதற்கு அற்புதமான வழி கண்டுபிடித்தேன். எனக்குச் சொந்த வாத்துக்கள் உண்டு. நான் விரும்பும் இடங்களுக்கு அவை என்னைக் கொண்டு போகும். நான் தெற்கே போயிருக்கிறேன். அருமையான இடம். அங்கே வெதுவெதுப்பான, நேர்த்தியான சேற்றுக் குட்டைகள் உண்டு. சிறு பூச்சிகளும் ஏராளம்'' என்று கதை அளந்தது.

''நீங்கள் எப்படி வாழ்கிறீர்கள் என்று பார்ப்பதற்காக இங்கே வந்தேன். என் வாத்துக்களைப் போக விட்டிருக்கிறேன். அவை இளவேனிற் காலத்தில் திரும்பி வரும். அது வரை உங்கள் குளத்தில் இருப்பேன்'' என்றது.

ஆனல் வாத்துக்கள் திரும்பி வரவில்லை. தவளை தரையில் மோதிச் சிதறிவிட்டது என்று அவை நினைத்து, அதற்காக நிரம்ப வருத்தப்பட்டன.

C 125



© தமிழ் மொழிபெயர்ப்பு: முன்னேற்றப் பதிப்பகம், 1975
சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

В. Гаршин. Лягушка-путешественница
На тамильском языке

V. GARSHIN
The Frog Went Travelling
In Tamil

Г $\frac{4803010102-403}{031(01)-83}$ 334-83